Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

Calendar .. .. }
Miscellaneous .. .. }
Preliminary Register .. .. } **S.C.** 191/2021
Sessions .. .. }
} Prosecution – **PW**3
Deposition of witness for } Defence –
} Court –

| | | |
|---|---|---|
| Name | : | இந்திராணி |
| Husband Name | : | முனியய்யா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2023

<u>(எதிரி ஆஜர் இல்லை, எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)</u>

முதல் விசாரணை–

நான் தற்போது உச்சிப்புளி துத்திவலசை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை பார்க்கிறேன். வழக்கில் இறந்துபோன சீனிவாசன் எனது மகன் ஆவார். அ.சா.1 சதீஷ்குமார் எனது இளையமகன் ஆவார். அ.சா.2 கவிதா எனது மருமகள் ஆவார். எதிரி பவித்ரனை தெரியும். என் மகன் சீனிவாசன் இறப்பதற்கு முன்பு உச்சிப்புளி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ வைத்து தொழில் செய்து வந்தார். எதிரி பவித்ரன் உச்சிப்புளி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறார். என் மகன் இறப்பதற்கு முன்பு எனது மகனுக்கும் எதிரி பவித்ரனுக்கும் ஆட்டோ சவாரி ஓட்டுவது சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது வந்தது. கடந்த

07.01.2020ம் தேதி என் மகன் சீனிவாசனை எதிரி பவித்ரன் சாவியை வைத்து என் மகனின் வலது கண்ணத்தில் கீழ்பகுதியில் சாவி வைத்து கிழித்து 7 தையல் போடப்பட்டது. இது சம்மந்தமாக நான் தான் எனது மகன் சீனிவாசனிடம் எதிரி பவித்ரன் உறவினர் என்பதால் புகார் கொடுக்க வேண்டாம் என்று சொன்னதால் நான் புகார் கொடுக்கவில்லை. 09.01.2020ம் தேதி மாலை 04.00 மணியளவில் என் இளையமகன் சதீஸ்குமாரும், எனது மகன் சீனிவாசனும் இருசக்கர வாகனத்தில் உச்சிப்புளியிலிருந்து இராமநாதபுரத்திற்கு வீட்டிற்கு சாமான்கள் வாங்க நடுவலசையில் புயல் காப்பகத்தின் அருகில் வந்து கொண்டிருந்தபோது எதிரி பவித்ரன் தனது ஆட்டோவை வைத்து எனது இளையமகன் சதீஸ்குமார் ஓட்டிவந்த இருசக்கரவாகனம் மீது எதிரி ஆட்டோ வைத்து மோதிவிட்டதாகவும் அதில் என் மகன் சீனிவாசன் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக எனது இளையமகன் சதீஷ்குமார் எனக்கு தகவல் சொல்லியதன் பேரில் நானும், என் மருமகள் கவிதா, பக்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் என் மகன் சீனிவாசனை பார்த்தபோது என் மகனுக்கு வலது, இடது நெற்றி மற்றும் தலையின் பின்பக்கம், வலது, இடது முழங்கால், முழங்கையில் காயம் இருந்தது. இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் பார்க்க முடியாது என்று சொன்னதால் மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். இது சம்மந்தமாக புகார் கொடுக்க எனது இளையமகன் சதீஷ்குமாரை உச்சிப்புளி காவல் நிலையத்திற்கு அனுப்பிவிட்டு நாங்கள் மதுரைக்கு சென்றுவிட்டோம். மதுரை விக்ரம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தபோது அங்கு பார்க்க முடியாது என்று சொன்னதால் மீண்டும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுவரும் வழியிலேயே என் மகன் சீனிவாசன் இறந்துவிட்டார். எனது மகன் சீனிவாசனுக்கும் எதிரி பவித்ரனுக்கும் ஆட்டோ சவாரி போவதில் முன்விரோதம் ஏற்பட்டதால் இந்த சம்பவம் நடந்தது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் மகன் சீனிவாசன் திருமணமாகி தனியாக குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் என் வீட்டிலிருந்து ஊருக்கு தெற்கே 2 கிமீ தூரம் தள்ளி குடியிருக்கிறார். என் ஊருக்கு செல்லவேண்டும் என்றால் மதுரை – மண்டபம் மெயின் ரோட்டில் உச்சிப்புளி ஆட்டோ ஸ்டாண்டிற்கு எதிர்புறமாக செல்லக்கூடிய

ரோட்டில் சென்றால் தான் எங்கள் ஊர் வரும் என்றால் சரிதான். எங்கள் வீட்டிலிருந்து உச்சிப்புளி மெயின்ரோடு 2 கிமீ தெற்கே இருக்கிறது. நானும், என் மருமகள் கவிதாவும் இராமநாதபுரம் ஆசிக் அமீன் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் ரோட்டில் கிடந்த ஆட்டோவையும், இருசக்கர வாகனத்தையும் பார்த்தோம் என்றால் சரிதான். அப்போது அங்கு போலிசார்கள் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அங்கு நாங்கள் சென்று அவைகளை பார்த்துவிட்டு அங்கிருந்த போலிசாரிடம் விவங்கள் கேட்டுவிட்டுத்தான் இராமநாதபுரம் ஆசிக் அமீன் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். இராமநாதபுரம் ஆசிக் அமீன் மருத்துவமனையில் நாங்கள் இருக்கும்போதே போலிசார் வந்துவிட்டார்கள். நான், எனது மருமகள் கவிதா ஆகியோர் மேற்படி இராமநாதபுரம் ஆசிக் அமீன் மருத்துவமனையில் இருக்கும்போது நாங்கள் போன் செய்து சதீஸ்குமார் வந்தார் என்றால் சரிதான். தற்போது சாட்சி சதீஸ்குமார் தான் எங்களுக்கு போன் அடித்தார் என்று கூறுகிறார். சதீஸ்குமாரின் போன் நம்பர் எனக்கு தெரியாது. என்னிடம் செல்போன் இல்லை. எங்கள் வீட்டிலும் லேண்ட்லைன் போன் கிடையாது என்றால் சரிதான். என் மகன் சீனிவாசனுக்கு சாவியை வைத்து தாடையில் குத்தி கிழித்த காயம் ஏற்பட்டது என்ற விசயத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். ரோட்டில் ஆட்டோ கிடந்த இடத்தில் வைத்து போலிசார் பார்த்தபோகும் அதேபோல இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் பார்த்தபோதும் என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும் அப்போது எழுதிக்கொண்டார்கள் என்றும் சொன்னால் சரிதான். நான் கையொப்பம் போடவில்லை. இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் வைத்து போலிசார் சதீஷ்குமாரை விசாரித்தபோது எழுதிக்கொண்டார்கள். அதில் கையெழுத்து போட்டாரா என்றால் போட்டிருப்பார். என் மகன் சீனிவாசனுக்கு ஒட்டுநர் உரிமம் இருக்கிறதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆட்டோ ஸ்டாண்டு என்பது 30, 40 ஆட்டோக்கள் இருக்கும் என்றால் சரிதான். நான் ஆட்டோ ஸ்டாண்டிற்கு போயிருக்கிறேன். மேற்படி ஆட்டோ ஸ்டாண்டுக்கு 4 புறங்களிலும் கடைகள், வீடுகள் இருக்கிறது என்றும் மிகமிக ஜன நெருக்கடியான பகுதி என்றால் சரிதான். ஆட்டோ ஸ்டாண்டிலிருந்து உச்சிப்புளி காவல் நிலையம் சுமார் 200 அடியிலிருந்து 300 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். என் மகன் சீனிவாசனுக்கு ஏற்பட்ட காயம் பற்றி எனக்கு நேரடியாக

தெரியாது. நான் தான் என் மகனை மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றேன். எந்த மருத்துவமனை என்று தெரியாது. மருத்துவமனையில் என் மகனுக்கு ஏற்பட்ட காயங்கள் சம்மந்தமாக என்ன என்று மருத்துவர் கேட்டார். என் மகன் சொன்னார். அதை மருத்துவர் எழுதிக்கொண்டார். இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயங்களை பார்த்தபோது எல்லா காயங்களில் இருந்தும் இரத்தம் வந்தது. அவரிடம் என்ன நடந்தது என்று கேட்டபோது அவர் சொல்லும் நிலையில் இல்லை. நான், என் மருமகள் கவிதா, கதிரேசன் ஆகியோரோடு தான் மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு சென்றோம். வேறுயாரும் வரவில்லை. மதுரை விக்ரம் மருத்துவமனையில் சேர்த்தபோது மருத்துவர் என்ன நடந்தது என்று கேட்டார். நான் சொன்னேன். அந்த மருத்துவமனையில் மருத்துவர் பார்க்க முடியாது என்ற காரணத்தினால் நாங்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்துவிட்டோம். அப்போது நடுஇரவு இருக்கும். அப்போது நானும் உடன் இருந்தேன். இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தபோது மருத்துவர் என் மகன் சீனிவாசனை பார்த்து என்ன நடந்தது என்று கேட்டார். நான் சொன்னேன். அதை மருத்துவர் எழுதிக்கொண்டார். மதுரை விக்ரம் மருத்துவமனையில் என் மகன் சீனிவாசனுக்கு தலை, கைகள், முழங்காலில் கட்டுகள் போடப்பட்டிருந்தது. துத்திவலசை பிரிவிலிருந்து நடுவலசை புயல் காப்பகம் என்பது சுமார் 3/4 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் ஊரிலிருந்து இராமநாதபுரம் வரவேண்டும் என்றால் உச்சிப்புளி மெயின் ரோட்டிற்கு வந்து தான் வரவேண்டும். அவ்வாறு வரும்போது காவல் நிலையத்தை முட்டிவிட்டு தான் வரவேண்டும் என்றால் சரிதான். நானோ, என் மருமகள் கவிதாவோ போலிசாரை பார்த்தபோதோ, காவல் நிலையத்திற்கு சென்றோ புகார் கொடுக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் வீட்டிலிருந்து கிளம்பும்போது எங்களுடன் என் மகன் சதீஷ்குமாரும் வந்தார். விசயத்தை கேள்விப்பட்டவுடன் என் மகன் சதீஷ்குமாரை காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கச் சொன்னோம். அதன் பின்பு நாங்கள் இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனைக்கு வந்து விட்டோம் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி எதிரிக்கும் ஆட்டோ ஸ்டாண்டில் சவாரி ஏற்றுவது சம்மந்தமாக தகராறு இருந்தது என்று சொல்வது பொய் என்றும் என் மகன் இறப்பதற்கு முதல் நாள் எதிரி சாவியை வைத்து கிழித்துவிட்டார் என்று சொல்வது பொய் என்றும் ஏற்கனவே எங்கள்

குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் உள்ள பகையை வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் என் மகன் மோட்டார் வாகன விபத்தில் காயம்பட்டார் என்றும் இது சம்மந்தமாக முத்துக்குமார் தான் முதன் முதலாக இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனை, இராமநாதபுரம் அரசு மருத்துவமனை, மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தார் என்றும் அவருக்குத்தான் என் மகன் காயம்பட்ட விவரம் தெரியும் என்றும் அவைகள் இவ்வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் அதனை மறைத்துவிட்டு பின்னிட்டு மிக காலதாமதமாக புகார் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.** 191/2021 |
| Sessions | .. | .. | } | |
| | | } | | Prosecution – **PW**2 |
| Deposition of witness for | | } | | Defence – |
| | | } | | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | கவிதா |
| Husband Name | : | சீனிவாசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2023

<u>(எதிரி ஆஜர் இல்லை, எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)</u>

முதல் விசாரணை–

நான் தற்போது துத்திவலசை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை பார்க்கிறேன். வழக்கில் இறந்துபோன சீனிவாசன் எனது கணவர் ஆவார். அ.சா.1 சதீஷ்குமார் எனது கொளுந்தன் ஆவார். எதிரி பவித்ரனை தெரியும். என் கணவர் சீனிவாசன் இறப்பதற்கு முன்பு உச்சிப்புளி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ வைத்து தொழில் செய்து வந்தார். எதிரி பவித்ரன் உச்சிப்புளி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறார்.

என் கணவருக்கு இறப்பதற்கு முன்பு எனது கணவருக்கும் எதிரி பவித்ரனுக்கும் ஆட்டோ சவாரி ஓட்டுவது சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது வந்தது. கடந்த 07.01.2020 ம் தேதி என் கணவர் சீனிவாசனை எதிரி பவித்ரன் சாவியை வைத்து என் கணவரின் வலது கண்ணத்தில் கீழ்பகுதியில் சாவி வைத்து கிழித்து 7 தையல் போடப்பட்டது. இது சம்மந்தமாக எனது மாமியார் இந்திராணி என்பவர் எதிரி பவித்ரன் உறவினர் என்பதால் புகார் கொடுக்க வேண்டாம் என்று சொன்னதால் நான் புகார் கொடுக்கவில்லை. 09.01.2020 ம் தேதி மாலை 04.00 மணியளவில் என் கொளுந்தன் சதீஸ்குமாரும், எனது கணவரும் எனது கொளுந்தன் சதீஷ்குமார் இருசக்கர வாகனத்தில் உச்சிப்புளியிலிருந்து இராமநாதபுரத்திற்கு வீட்டிற்கு சாமான்கள் வாங்க நடுவலசையில் புயல் காப்பகத்தின் அருகில் வந்து கொண்டிருந்தபோது எதிரி பவித்ரன் தனது ஆட்டோவை வைத்து எனது கொளுந்தன் ஓட்டிவந்த இருசக்கரவாகனம் மீது எதிரி ஆட்டோ வைத்து மோதிவிட்டதாகவும் அதில் என் கணவர் காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக எனது கொளுந்தன் சதீஷ்குமார் என் மாமியாருக்கு தகவல் சொல்லியதன் பேரில் நானும், என் மாமியார், பக்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் என் கணவரை பார்த்தபோது என் கணவருக்கு வலது, இடது நெற்றி மற்றும் தலையின் பின்பக்கம், வலது, இடது முழங்கால், முழங்கையில் காயம் இருந்தது. இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் பார்க்க முடியாது என்று சொன்னதால் மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். இது சம்மந்தமாக புகார் கொடுக்க எனது கொளுந்தன் சதீஷ்குமாரை உச்சிப்புளி காவல் நிலையத்திற்கு அனுப்பிவிட்டு நாங்கள் மதுரைக்கு சென்றுவிட்டோம். மதுரை விக்ரம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தபோது அங்கு பார்க்க முடியாது என்று சொன்னதால் மீண்டும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுவரும் வழியிலேயே என் கணவர் இறந்துவிட்டார். எனது கணவருக்கும் எதிரி பவித்ரனுக்கும் ஆட்டோ சவாரி போவதில் முன்விரோதம் ஏற்பட்டதால் இந்த

சம்பவம் நடந்தது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எனது கணவருக்கும் எதிரி பவித்ரனுக்கும் ஆட்டோ சவாரி ஓட்டுவது சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது வந்தது என்றும் கடந்த 07.01.2020 ம் தேதி என் கணவர் சீனிவாசனை எதிரி பவித்ரன் சாவியை வைத்து என் கணவரின் வலது கண்ணத்தில் கீழ்பகுதியில் சாவி வைத்து கிழித்ததாக நான் சொல்லியுள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதேபோல் என் கணவரும் என் கொளுந்தன் சதீஷ்குமாரும் சென்ற இருசக்கர வாகனத்தை எதிரி ஆட்டோ வைத்து இடித்துவிட்டார் என்ற விசயம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு விசயமாக உச்சிப்புளி போலிசார் என்னை 2 முறை விசாரித்தார்கள். அந்த 2 முறைகள், 1–வதாக இராமநாதபுரம் ஆசிக் அமீன் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதுபோல 2–வதாக மதுரை விக்ரம் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் வைத்து போலிசார் விசாரித்தபோது நான், என் மாமியார் இந்திராணி, என் கொளுந்தன் சதீஷ்குமார் மற்றும் உறவினர்கள் அனைவரும் இருந்தார்கள். அந்த சமயத்தில் சதீஷ்குமாரையும், என் மாமியார் இந்திராணியையும் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது நேரம் இரவு 07.00, 07.30 மணி இருக்கும். அப்போது என் கணவர் சீனிவாசன் நடந்த சம்பவம் பற்றி போலிசாரிடம் சொன்னார். அவர் சொல்லும் போது போலிசார் எழுதிக்கொண்டார்கள். அதேபோல் நான், என் மாமியார், சதீஷ்குமார் ஆகியோர் சொன்னதையும் போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு இரவு 08.00 மணிக்கு என் கணவருடன் மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு சென்றோம். மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு செல்லும்போது இரவு 10.30 மணி இருக்கும். இராமநாதபுரம் ஆசிக் அமீன் மருத்துவமனையிலிருந்து நேரடியாக மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். வேறு எங்கும் கொண்டு செல்லவில்லை. மதுரை விக்ரம் மருத்துவமனையில் மருத்துவர்கள் பார்த்துவிட்டு ரொம்ப சீரியசாக

இருக்கிறது. பிழைப்பது கடினம் எனவே கொண்டு சென்றுவிடுங்கள் என்று சொன்னதன் காரணமாக மீண்டும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வேறு ஒரு ஆம்புலன்ஸில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். அப்போது நேரம் அதிகாலை 02.00 மணி இருக்கும். இந்த விவரங்கள் தெரிந்த உடன் மறுபடியும் உச்சிப்புளி போலிசார் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். அப்போது அதிகாலை 03.00 மணி இருக்கும். முத்துக்குமார் என்று என் கணவரின் தம்பி இருக்கிறார். முத்துக்குமார் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்குத் தான் வந்தார். என் கணவருக்கு இடது தாடையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல்கள் போடப்பட்டு பேன்டேஜ் போட்டு மேற்படி காயம் ஆராதநிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். என் கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு உச்சிப்புளி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார். எந்த மருத்துவமனை என்று எனக்கு தெரியாது. சிகிச்சைக்கும் நான் செல்லவில்லை. இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும் என் மாமியார் சொல்லித்தான் நாங்கள் புறப்பட்டு சென்றோம் என்றும் சொன்னால் சரியல்ல. உச்சிப்புளி மெயின் ரோட்டிலிருந்து துத்திவலசை கிராமம் சுமார் 3/4 கிமீ தூரம் இருக்கும். என் கணவர் மாலை 04.30 மணிக்குத்தான் வீட்டிற்கு சாமான்கள் வாங்குவதற்காக சென்றார். என் கொளுந்தன் சதீஷ்குமார் திருமணமாகவில்லை. அவர் அவரது தாயாருடன் குடியிருந்து வருகிறார். நான் திருமணமாகி தனியாக குடியிருக்கிறேன். என் கணவர் ஓட்டி வந்த ஆட்டோவின் நம்பர் தெரியாது. அந்த சமயத்தில் தான் புதிதாக ஆட்டோ வாங்கியிருந்தார். எதிரி பவித்ரன் எந்த ஆட்டோ ஸ்டாண்டில் ஓட்டுகிறார் என்ற விவரம் தெரியாது என்றும் ஆனால் அவர் வைத்திருந்த ஆட்டோ நம்பர் TN 65 E 3169 ஆகும். நாங்கள் இந்த சம்பவம் கேள்விப்பட்டு இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் செல்லும் வழியில் உச்சிப்புளி மெயின் ரோட்டின் துத்திவலசை பிரிவிலிருந்து மேற்படி மெயின் ரோட்டில் நடுரோட்டில் சுமார் 100 அடியிலிருந்து 200 அடி தூரத்தில் மேற்படி ஆட்டோவும் எனது கொளுந்தனார்

ஓட்டிய இருசக்கரவாகனமும் கிடந்தது. அதை நாங்கள் பார்த்தோம். மேற்படி ஆட்டோவும், பைக்கும் கண்ணாடிகள் உடைந்து சேதாரங்களுடன் தான் கிடந்தது. அதை நாங்கள் பார்த்தோம். எனது கொளுந்தனர் ஓட்டிய இருசக்கர வாகனத்தின் நம்பர் தெரியாது. நான் சொன்ன மாதிரி எதிரிக்கும் ஆட்டோ ஸ்டாண்டில் சவாரி ஏற்றுவது சம்மந்தமாக தகராறு இருந்தது என்று சொல்வது பொய் என்றும் ஏற்கனவே எங்கள் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் உள்ள பகையை வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் என் கணவர் மோட்டார் வாகன விபத்தில் காயம்பட்டார் என்றும் இது சம்மந்தமாக என் கொளுந்தன் முத்துக்குமார் தான் முதன் முதலாக இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனை, இராமநாதபுரம் அரசு மருத்துவமனை, மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தார் என்றும் அவருக்குத்தான் என் கணவர் காயம்பட்ட விவரம் தெரியும் என்றும் அவைகள் இவ்வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் அதனை மறைத்துவிட்டு பின்னிட்டு மிக காலதாமதமாக புகார் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.